
aic
agency for integrated care
Go Respite
பராமரிப்பாளர்களே,
இடைவேளை
எடுத்துக்கொள்ளுங்கள்
கிடைக்கின்ற இடை ஓய்வு பராமரிப்பு பற்றி இன்றே மேலும் அறிக

# Go Respite

**பராமரிப்பு வழங்குதல் என்பது ஒரு நீண்ட பயணமாகும். அதனால் தான் கால முறைப்படி இடைவேளைகளை எடுத்துக்கொள்வது முக்கியமாகும். இதன்மூலம் நீங்கள் உங்களின் அன்புக்குரியவருடன் பராமரிப்புப் பயணத்தைத் தொடரலாம்.**

**நீங்கள் பராமரிப்பு வழங்கும் பொறுப்பில் இருந்து சிறிது இடைவேளை எடுத்துக்கொள்ளும் போது அல்லது உங்கள் வெளிநாட்டுப் பணிப்பெண் விடுப்பில் தாய்நாட்டிற்குச் செல்லும் போது, உங்களின் வயதான அன்புக்குரியவருக்கான இடை ஓய்வுப் பராமரிப்பு ஒரு குறுகிய காலப் பராமரிப்பாக இருக்கும்.**

**முன்னதாகவே இடை ஓய்வுப் பராமரிப்புக்காகத் திட்டமிடுவது, உங்களையும் உங்களின் அன்புக்குரியவர்களையும் சிறப்பாகப் பராமரிக்க உங்களுக்கு உதவும்.**

**மேல் தகவல்களுக்கு, தயவுசெய்து www.silverpages.sg/gettingrespite என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.**

## 1 நான் எங்கு இடை ஓய்வுப் பராமரிப்பைப் பெறலாம்?



1 **ஒரு முதியோர் பராமரிப்பு மையத்தில்**
உங்களின் அன்புக்குரியவர் ஒரு பராமரிப்பு மையத்தில் பகல் நேரத்தில் நடைபெறும் குழு நடவடிக்கைகளில் இணைந்திடுவார். இந்நிலையங்கள் வார நாட்களிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட மையங்களில் வார இறுதிகளிலும் இயங்குகின்றன.



2 **ஒரு தாதிமை இல்லத்தில்**
உங்களின் அன்புக்குரியவர் தாதிமை இல்லத்தில் ஒவ்வொரு முறையும் குறைந்தது ஏழு நாட்களுக்கும், மொத்தத்தில் ஒரு ஆண்டுக்கு **30 நாட்கள்** வரையும் தங்கிப் பராமரிப்பைப் பெறுவார்.



## 2 யாருக்கு ஏற்றது?



உங்களின் அன்புக்குரியவருக்கு உணவு உண்ணுதல் அல்லது குளித்தல் போன்ற அன்றாட நடவடிக்கைகளில் உதவி தேவைப்பட்டால், அவர் இடை ஓய்வுப் பராமரிப்புக்குத் தகுதிபெறுவார். அவர் இச்சேவைக்காக முன்பதிவு செய்துகொள்ள வேண்டும்.

முதுமை மறதிநோய்க்கான பகல்நேரப் பராமரிப்பு நிலையத்தை அணுகுவதற்கு, உங்களின் அன்புக்குரியவருக்கு முதுமை மறதிநோய் இருப்பதாக மருத்துவச் சோதனையில் கண்டறியப்பட்டிருக்க வேண்டும்.

உங்களின் அன்புக்குரியவர் ஏற்கெனவே மூத்தோர் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்தால், நீங்கள் முன்பதிவு **<u>செய்ய வேண்டிய அவசியமில்லை</u>**. உங்களுக்கு இடை ஓய்வுப் பராமரிப்பு தேவைப்பட்டால், தயவுசெய்து உங்களின் வழக்கமான பகல்நேரப் பராமரிப்பு வழங்குநரை அணுகவும்.

உங்களின் அன்புக்குரியவருக்கு அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளில் பெரும்பாலானவற்றுக்கு உதவியும், மற்றும்/ அல்லது அன்றாடத் தாதிமைப் பராமரிப்பும் தேவைப்படுகிறது எனில், நீங்கள் தாதிமை இல்லங்களில் இடை ஓய்வுப் பராமரிப்பைக் கருத்தில் கொள்ளலாம்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் இடை ஓய்வுப் பராமரிப்புச் சேவை வழங்குநரிடம் சென்று வருவதற்கு நீங்கள் தான் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டியிருக்கும்.

## 3 ஏன் முன்பதிவு செய்ய வேண்டும்?



முன்பதிவு செய்வது, நீங்கள் முன்னதாகவே சேவைகளை அடையாளம் காண்பதற்கும் திட்டமிடுவதற்கும் உங்களுக்கு உதவும். இதன்மூலம் உங்களின் அன்புக்குரியவருக்குத் தேவைப்படும் போது மிக விரைவாக இடை ஓய்வுப் பராமரிப்பை வழங்க முடியும்.

# 4 எப்படி முன்பதிவு செய்வது?



**வழிமுறை 1**

பராமரிப்புத் தேவைகள், பராமரிப்பு நிலையம் அமைந்திருக்கும் இடம் மற்றும் பராமரிப்பின் கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில், உங்களின் அன்புக்குரியவருக்கு ஏற்ற சேவை வகை குறித்து உங்களின் அன்புக்குரியவருடனும் குடும்பத்தினருடனும் பேசுங்கள்.

**வழிமுறை 2**

பங்கேற்கின்ற நிலையங்கள் மற்றும் தாதிமை இல்லங்களின் பட்டியலில் இருந்து நீங்கள் விரும்பும் சேவைகளையும் வழங்குநர்களையும் தேர்ந்தெடுங்கள்.

**வழிமுறை 3**

பங்கேற்கின்ற நிலையங்கள் மற்றும் தாதிமை இல்லங்களின் முழுமையான பட்டியலைக் கண்டறிவதற்கும், முன்பதிவுப் படிவத்தைப் பதிவிறக்குவதற்கும், தயவுசெய்து **www.silverpages.sg/gettingrespite** என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது கீழேயுள்ள **QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**.

பூர்த்திசெய்த முன்பதிவுப் படிவத்தைப் பின்வரும் ஏதேனும் முறைகளைப் பயன்படுத்திச் சமர்ப்பியுங்கள்:

**a மின்னஞ்சல்:**
gorespite@aic.sg

**b அஞ்சல் மூலமாக:**
Agency for Integrated Care
Home and Community Care Division
7 Maxwell Road, #04-01
MND Complex Annex B
Singapore 069111

**c நேரில்:**
உங்களுக்கு அருகாமையில் உள்ள AICare Link கிளை அமைந்திருக்கும் இடங்கள் தொடர்பான முழுமையான பட்டியலுக்கு, **www.silverpages.sg/aicarelink** என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது கீழேயுள்ள **QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்**.

**வழிமுறை 4**

உங்களுக்கு இடை ஓய்வு பராமரிப்புக்கு அரசு மானியங்களைப் பெற விரும்பினால், முன்பதிவுச் செயல்முறையின் ஒரு பகுதியாக நீங்கள் ஒரு குடித்தனப் பணவசதிச் சோதனைக்கு உட்படுத்தப்படுவீர்கள்.*

குடித்தனப் பணவசதிச் சோதனைக்கான படிவத்தைப் பதிவிறக்கிப் பூர்த்திசெய்வதற்கு, தயவுசெய்து **https://bit.ly/2OWzRQg** என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது கீழேயுள்ள **QR படிவத்தை ஸ்கேன் செய்யுங்கள்**.

**வழிமுறை 5**

பூர்த்திசெய்த முன்பதிவு மற்றும் குடித்தனப் பணவசதிச் சோதனைக்கான படிவங்களைச் சமர்ப்பித்த பிறகு, நீங்கள் AIC-யிடம் இருந்து ஒரு ஒப்புகைக் கடிதத்தைப் பெறுவீர்கள்.

**வழிமுறை 6**

நீங்கள் அந்த ஒப்புகைக் கடிதத்தைப் பெற்றதும், முன்பதிவுச் செயல்முறையை நிறைவுசெய்ய, நீங்கள் விரும்பும் சேவை வழங்குநரைத் தொடர்புகொண்டு, ஒரு மதிப்பீட்டுக்காக நேரத் திட்டமிடுங்கள்.

# 5 செயற்படுத்தல்

**வழிமுறை 7**

இச்செயல்முறை நிறைவடைந்ததும் முன்பதிவு **2 ஆண்டுகளுக்குச்** செல்லுபடியாகும். அதன்பிறகு உங்கள் உடல் நிலைமை பற்றிய தகவல்களை மேம்படுத்துவது அவசியமாகும்.

முன்பதிவை வெற்றிகரமாகச் செய்த பிறகு, **நீங்கள் விரும்பும் சேவை வழங்குநரை நேரடியாகத் தொடர்புகொண்டு** உங்களுக்கு இடை ஓய்வு பராமரிப்பு தேவைப்படுவதை கூறுங்கள்.

*நேரத்தை குறைப்பதே இந்த முன்பதிவுக்கான நோக்கமாகும். முன்பதிவு செய்துகொல்வதனால் நீங்கள் விரும்பும் சேவை வழங்குநரிடம் உங்களுக்கு இடம் கிடைக்கும் என்பதில் உத்திரவாதமில்லை. இடம் கிடைத்தல் காலியிடத்திற்கு உட்பட்டது. மேலும் முன்பதிவு செய்த நேரத்திலிருந்து உடல் நிலைமையில் எந்த குறிப்பிடத்தக்க மாற்றமும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.*

** சமூகப் பராமரிப்புச் சேவைகளுக்கான குடித்தனப் பணவசதிச் சோதனை, மருத்துவமனைகளில் உள்நோயாளிச் சேவைகளுக்காகச் செய்யப்படுகின்ற பணவசதிச் சோதனையிலிருந்து மாறுபட்டதாகும்.*

சமூகப் பராமரிப்புச் சேவைகள் குறித்த
மேல் தகவல்களுக்கு,

*கிளிக் செய்யவும்* | **www.silverpages.sg**

*அழைக்கவும்* | **1800-650-6060**

*பார்வையிடவும்* | **AICare Link**

மக்கள் நலமாக வாழ்வதற்கும், படிப்படியாக மூப்படைவதற்கும் இயலச் செய்கின்ற ஒரு உயிர்த்துடிப்பான பராமரிப்புச் சமூகத்தை உருவாக்குவதற்கு ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு (AIC) குறிக்கோள் கொண்டிருக்கிறது. மூத்தோர்கள் மூப்படைகையில் அவர்களின் தேவைகளுக்கு உதவ AIC பராமரிப்பை ஒருங்கிணைக்கிறது.

சுறுசுறுப்பாக நீடிப்பது மற்றும் நலமாக மூப்படைவது குறித்த தகவல்களுடன் நாங்கள் பராமரிப்பாளர்களையும் மூத்தோர்களையும் சென்றடைகிறோம். மேலும், மக்களுக்குத் தேவைப்படுகின்ற சேவைகளுடன் அவர்களை இணைக்கிறோம். தரமான பராமரிப்பை வழங்குவதற்கான தங்கள் திறனை வலுப்படுத்த நாங்கள் பங்காளர்களுக்கு உதவுகிறோம். மேலும், நமது மூப்படைகின்ற மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பங்காளர்களைக் கூட்டிணைந்து பணியாற்ற வைக்கிறோம்.

சமூகத்தில் நாங்கள் மேற்கொள்ளும் பணியால், தேவையிருப்போருக்குப் பராமரிப்புச் சேவைகளும் தகவல்களும் எளிதில் கிடைக்கின்றன.

மேல் தகவல்களுக்கு, தயவுசெய்து **www.aic.sg** என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்